### இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை விரைவில் மறு ஆய்வு செய்து

# கச்சத்தீவை மீட்க உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## பிரதமருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, ஏப்.5–

**தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிரந்தரமாக பாதுகாக்கும் வகையில், இந்திய– இலங்கை ஒப்பந்தத்தை விரைவில் மறு ஆய்வு செய்து கச்சத்தீவை மீட்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், இலங்கை அரசுடன் பேசி, அந்நாட்டு சிறையில் வாடும் நமது மீனவர்களையும், அவர்களது படகுகளையும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்து மீட்டுக் கொண்டுவர வேண்டுமென்பதை வலியுறுத்தியும் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 02.04.2025 அன்று கச்சத்தீவை மீட்க வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில், தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிரந்தரமாக பாதுகாக்கும் வகையில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை விரைவில் மறு ஆய்வு செய்து கச்சத்தீவை மீட்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் அரசுமுறைப் பயணமாக இலங்கை செல்லும் பிரதமர் அவர்கள், இலங்கை அரசுடன் பேசி, அந்நாட்டு சிறையில் வாடும் நமது மீனவர்களையும், அவர்களது படகுகளையும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்து மீட்டுக் கொண்டுவர வேண்டுமென்பதை வலியுறுத்தியும் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (03.04.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், பாக். வளைகுடா பகுதியில் வாழும் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாக்கும் வகையில், கச்சத்தீவை திரும்பப் பெறுவது தொடர்பாக 02.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 1974-ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்தியா- இலங்கை ஒப்பந்தம் (கச்சத்தீவு ஒப்பந்தம்) தான் நீடிக்கும் இப்பிரச்சனைக்கு அடிப்படையாக உள்ளது என்பதை தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

கச்சத்தீவு ஒப்பந்தத்தை ஆரம்பத்திலிருந்தே தமிழ்நாடு அரசு உறுதியுடன் எதிர்த்து வந்துள்ளதையும், 1974-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் கச்சத்தீவை இலங்கைக்கு விட்டுக் கொடுத்ததை தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்போது கடுமையாக எதிர்த்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், 28.06.1974 அன்று ஒன்றிய அரசு கச்சத்தீவு ஒப்பந்தத்தில் மாநில அரசின் இசைவின்றி கையெழுத்திட்ட பிறகு, அப்போதைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உடனடியாக மறுநாளே 29.06.1974 அன்று தலைமைச் செயலகத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அதைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றி, அன்றைய தினமே அப்போதைய இந்தியப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளதையும் தனது கடிதத்தில் கோடிட்டு காட்டியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, கச்சத்தீவு பிரச்சினையில் ஒன்றிய அரசின் முடிவை வன்மையாக எதிர்த்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 21.08.1974 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையும், நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாக்க, கச்சத்தீவினை திரும்பப் பெற வேண்டும் என்ற நிலையான கோரிக்கையை வலியுறுத்தி, 03.10.1991,03.05.2013,05.12.2014 ஆகிய நாட்களில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இதே போன்ற தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதையும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நமது மீனவர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவதாலும், அவர்களது படகுகள் பெருமளவில் பறிமுதல் செய்யப்படுவதாலும், கடலோர மீனவ சமுதாயத்தினரின் வாழ்க்கை மிகுந்த கவலையிலும், துயரத்திலும் ஆழ்ந்துள்ளதாக தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், கைது மற்றும் பறிமுதல் நடவடிக்கைகளால் மீனவர்களின் வாழ்வாதாரமும் நிலையற்றதாக மாறியுள்ளதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தான் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு இந்தியப் பிரதமர் அவர்களுடன் 17.06.2021 அன்று நடைபெற்ற முதல் சந்திப்பின்போது, இப்பிரச்சினையை பிரதமர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்ததாகவும், இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் முந்தைய கோரிக்கைகளை அடுத்தடுத்த சந்திப்பின் போதும் வலியுறுத்தியுள்ளதாகவும், இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவது மற்றும் தாக்கப்படுவது குறித்து 2021-ஆம் ஆண்டு முதல் வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்கும், பிரதமர் அவர்களுக்கும் பல முறை கடிதங்களை எழுதியுள்ளதையும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2024-ஆம் ஆண்டில், 530 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், 2025-ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில், 147 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், நமது மீனவர்களுக்கு அதிகபட்ச சிறைத்தண்டனையும், பெருந்தொகையும் அபராதமாக விதிக்கப்பட்டு வருவதாகவும், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு ஏலத்திற்கு விடப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள் இலங்கையின் இத்தகைய தீவிர நடவடிக்கைகள் நமது மீனவர்களை வறுமையின் விளிம்பு நிலைக்குத் தள்ளியுள்ளதால், இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு ஒரே வழி கச்சத்தீவை திரும்பப் பெற வேண்டும் என்ற தொடர் கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துவதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை உடனடியாக மறு ஆய்வு செய்து, கச்சத்தீவை மீட்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசு எடுக்க வேண்டும் என்றும் அரசுமுறைப் பயணமாக இலங்கை செல்லும் இந்தியப் பிரதமர் அவர்கள், இலங்கை அரசுடன் பேசி, அந்நாட்டு சிறையில் வாடும் நமது மீனவர்களையும், அவர்களது படகுகளையும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்து மீட்டுக் கொண்டுவர வேண்டுமென்பதை வலியுறுத்தி 02.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதையும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிரந்தரமாக பாதுகாக்கும் வகையில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை விரைவில் மறு ஆய்வு செய்து கச்சத்தீவை மீட்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி முதலமைச்சர் அவர்கள் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் மண்டலம் 9–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 05.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 1 | சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி | காமாட்சி–மீனாட்சி திருமண மண்டபம், சிந்தாதிரிப்பேட்டை |
| 06.04.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | ஆயிரம்விளக்கு | அண்ணா அறிவாலயம், தேனாம்பேட்டை |
| 12.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | தியாகராய நகர் | ஆதித் ஹால், முத்துரங்கன் சாலை, தியாகராய நகர் |
| 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | மயிலாப்பூர் | மகிழ் ஹால், சிருங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரம், மயிலாப்பூர் |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | அண்ணா நகர் | அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தக்கரை |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 9 | தூத்துக்குடி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | கோவில்பட்டி | சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-04-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டுள்ள–

# மணிப்பூரில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அமைவதே அமைதிக்கு வழி!

## மக்களவையில் - கனிமொழி கருணாநிதி வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஏப்.5-

மணிப்பூர் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தியதற்கு ஒப்புதல் அளிக்கும் தீர்மானம் மீதான விவாதம் ஏப்ரல் 2 ஆம் தேதி நள்ளிரவு கடந்து ஏப்ரல் 3 ஆம் தேதி முன்னிரவு 2 மணிக்கு நடைபெற்றது.

இதில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி ஆற்றிய உரை வருமாறு:-

"மணிப்பூர் விவகாரம் பற்றி இந்த அவையில் விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகளான நாங்கள் பல முறை இங்கே வற்புறுத்தியிருக்கிறோம்.

ஆனால், இப்போது, நள்ளிரவு 2 மணிக்கு நீங்கள் நேரம் தேர்வு செய்திருக்கிறீர்கள். இதுதான் மணிப்பூர் மக்கள் மீது நீங்கள் காட்டும் அக்கறையா? இது தான் மணிப்பூர் மக்கள் பற்றி விவாதிப்பதற்கான நேரமா? இதுவே இந்த அரசு மணிப்பூர் மக்கள் மீது வைத்திருக்கும் மரியாதையைக் காட்டுகிறது. முறையாக நாளை இதை விவாதிப்ப தற்கான வாய்ப்பை ஏன் நீங்கள் வழங்கவில்லை? இது பெருஞ்சோகம்.

மணிப்பூரில் நடந்த வன்முறைகளால் 260 க்கும் மேல் மக்கள் உயிரிழந்துவிட்டனர். 67 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். 5 ஆயிரம் வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தேவாலயங்கள், கோவில்கள் சூறையாடப்பட்டிருகின்றன,.

நாங்கள் வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருக்கும் முகாம்களுக்கு சென்றோம்., அங்கே மக்களை சதித்தோம். அங்கே ஒரு தாயை பார்த்தேன். ஒவ்வொரு நாளும் அந்த முகாமின் வாசல் கதவருகே நின்று அவள் பார்த்துக் கொண்டே இருக்கிறார். அவரது மகன் திரும்ப வருகிறானா இல்லையா என்பதுதான் அந்தத் தாயின் எதிர்பார்ப்பு. அந்த தாயின் ஒரே ஒரு கோரிக்கை என்ன தெரியுமா? 'என் மகன் இருக்கிறானா இல்லையா என்பதை மட்டும் சொல்லிவிடுங்கள். ஒவ்வொரு நாளும் அவன் வருவான் வருவான் என்று நம்பிக் கொண்டிருக்கிறேன். அவன் இல்லையென்று சொல்லிவிட்டால் என் எதிர்பார்ப்பையாவது நிறுத்திக் கொள்வேன்' என்று கதறினார்.

இது ஏதோ ஒரே ஒரு பெண்ணின், ஒரே ஒரு தாயின் கதை அல்ல. மணிப்பூரின் பல்லாயிரக்கணக்கான தாய்கள் வலியும் வேதனையும் மிகுந்த காத்திருப்பில் இருக்கிறார்கள். அவர்களின் குடும்பத்தில் இருந்தவர்கள் இடம்பெயர்ந்து எங்கேனும் சென்றிருக்கிறார்களா... அல்லது இந்த உலகத்தை விட்டே சென்றுவிட்டார்களா என்ற கேள்விக்கு விடை தெரியாமல் ஒவ்வொரு நிமிடமும் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட துயரில் தவிக்கும் மணிப்பூருக்கு அங்கே இருந்த அரசு அமைதியை நிலைநாட்ட எதுவும் செய்யவில்லை என்பது கொடுந்துயர்.

அங்கே தேர்ந்தெடுக்கபப்பட்ட முதலமைச்சரே வன்முறையை உருவாக்குவதிலும், தூண்டிவிடுவதிலும் ஈடுபட்டிருக்கிறார். ஆயுதங்கள் எப்படி தீவிரவாதிகள், போராட்டக் காரார்கள் கைகளுக்கு சென்றன? இது வெட்கக் கேடானது. உயிரிழப்புகளுக்கு யார் பதில் சொல்வது? இரு பெண்கள் ஆடையின்றி பொதுவெளியில் இழுத்துச் செல்லப்பட்டனர். இது தேசத்துக்கே அவமானம். யார் அதற்கு பதில் சொல்வது?

இப்போது குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்ட பிறகு அங்கே மக்கள் சுதந்திரமாக நடமாடுகிறார்கள் என்று உள்துறை அமைச்சர் சொல்கிறார். ஆனால் அதன் பிறகும் அங்கே ரத்தக் களறி தான் ஏற்பட்டது. சுதந்திரமாக நடமாடுகிறார்கள் என்று அமித் ஷா சொன்ன பிறகு 103 பேர் காயமடைந்திருக்கிறார்கள். 16 பேர் மிக மோசமாக பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். குடியரசுத் தலைவர் ஆட்சியால் அங்கே என்ன நடந்துவிடப் போகிறது?

14 ஆயிரம் மாணவர்கள் பள்ளிகளுக்கு மீண்டும் செல்ல முடியாமல் தவிக்கிறார்கள். ஆனால் கல்விக்காக 2.3% தான் பட்ஜெட்டில் மணிப்பூருக்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. 28% உணவு பட்ஜெட்டிலும் குறைக்கப்பட்டு ள்ளது. அங்கே முகாம்களில் தண்ணீர் இல்லை, உணவு இல்லை.

எங்கள் தமிழ்நாடு முதல்வர் தெளிவாக சொல்லியிருக்கிறார். மணிப்பூரில் இயல்பு நிலை உருவாக வேண்டுமென்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அமைய வேண்டும் என்று கூறியுள்ளார். அங்கே அமைதி, இணக்கம் கொண்டுவர வேண்டும். இந்த அரசு போல இல்லாமல் புதிய அரசு மக்களிடம் இணக்கம் ஏற்படுத்தும் வகையில் அமைய வேண்டும்.

மணிப்பூரில் இருக்கும் பெண்கள் பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்களா? உங்களுக்கும் நாட்டுக்கும் நேர்மையாக இருக்க வேண்டிய நேரம் இது.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி உரையாற்றினார்.

### பசுத்தோல் போர்த்திய புலியைப் போல் மக்களை ஏமாற்றி

# வாக்கு வங்கி அரசியல் செய்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு!

## நாடாளுமன்றத்தில் - வக்ஃபு சட்டம் மீதான விவாதத்தில் - தயாநிதிமாறன் கண்டனம்!

புதுடெல்லி, ஏப்.5-

**மக்களவையில் 12 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்து, நள்ளிரவைக் கடந்து நடைபெற்ற வக்ஃப் (திருத்த) மசோதா குறித்த கடுமையான விவாதங்கள் எழுந்தன.**

**ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்த இந்த மசோதா, சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதிக்கும் வகையில் செயல்படும் என்று கடும் எதிர்ப்பு கிளம்பியது.**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், கழக நாடாளுமன்றக் குழுவின் துணைத் தலைவர் தயாநிதி மாறன் இந்த மசோதாவிற்கு எதிராக தீவிரமாக உரையாற்றினார்.**

**மசோதாவின் அரசியல் நோக்கத்தையும், முஸ்லிம் சமூகத்தின் மீதான அதன் தாக்கத்தையும் அவர் தெளிவாகச் சுட்டிக்காட்டி னார்.**

**உத்தரப் பிரதேசத்தில் பா.ஜ.க.வின் ஆதரவு குறைந்திருப்பதையும், வெற்றிக்காக மத அரசியலைத் தூண்டும் உத்திகளையும் அவர் வெளிப்படுத்தினார்.**

**பா.ஜ.க. அரசு, தனது நண்பர்களான பெரிய தொழிலதிபர்களுக்கு ஆதரவாக செயல்படுவதாகவும், சிறுபான்மையினரின் சொத்துக்களைக் கட்டுப்படுத்தும் வலையை விரிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.**



*அவருடைய உரை பின் வருமாறு:*

*இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த வக்ஃப் மசோதாவை எதிர்த்து உரையாற்றுகிறேன். இந்த மசோதாவைக் கொண்டுவருவதற்கு முக்கியக் காரணம் எண்ணிக்கைகளில் தெரிகிறது: 71, 62, 36. இவை என்னவென்று தெரியுமா?*

*2014இல் உத்தரப் பிரதேசத்தில் பா.ஜ.க. வென்ற எம்.பி. இடங்கள் 71, 2019இல் 62, 2024இல் 36. 1990இல், 'பாபர் மசூதியை இடிக்க வேண்டும், அங்கு ராமர் கோயிலைக் கட்ட வேண்டும், ஸ்ரீராம் ஜெய் ஸ்ரீராம்' என்று கூறி 71 இடங்களைப் பிடித்தார்கள். பின்னர் அவர்களின் செல்வாக்கு சரிந்து, 36 இடங்களுடன் ராமர் கோயிலைத் திறந்தார்கள்.*

*இஸ்லாமியர்களிடமிருந்து பாபர் மசூதியைப் பறித்ததோடு, இந்துக்களிடமிருந்து, குறிப்பாக ஏழை விவசாயிகளிடமிருந்து, சுமார் 4,500 ஏக்கர்களைப் பறித்தார்கள். விமான நிலையங்கள், சாலைகள், பணக்காரர்களுக்காக ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் கட்டுவதற்காக இதைச் செய்தார்கள்.*

*இதன் விளைவு என்ன? 2024 தேர்தலில் அயோத்தியில் வெற்றி பெற்றவர் யார்? சமாஜ்வாடி கட்சியைச் சேர்ந்தவர் 56,811 வாக்குகளால் வென்றார். இதை அவர்களால் தாங்க முடியவில்லை. இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே வெறுப்பைத் தூண்டினால் மட்டுமே தங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.*

*அவர்களின் வெற்றிக்கு காரணம் வெறுப்பு, வெறுப்பு உணர்வு, பிரிவினை அரசியல் மட்டுமே.*

*நான் கேட்கிறேன், 'ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுகிறதாமா? இஸ்லாமியர்களைப் பற்றி வருத்தப்படுவது போல் நடிக்கிறீர்களா?' தொடர்ந்து இஸ்லாமியர்களுக்கு எதிராக மசோதாக்களைக் கொண்டுவந்தது யார்? அமித் ஷா அவர்கள்தானே!*

*காஷ்மீர் மசோதாவைக் கொண்டுவந்ததும் அவர்தானே! அப்போது நாங்கள் கேட்டோம், 'வட இந்தியாவுக்கு மட்டும் மசோதா கொண்டு வருகிறீர்கள், இலங்கைத் தமிழர்களுக்கு ஏன் கொண்டு வரவில்லை?' என்று. ஆனால் உங்கள் காதில் அது விழவில்லை.*

**உங்களுக்கு வந்தால் ரத்தம் எங்களுக்கு வந்தால் தக்காளி சட்னியா?**

*இன்று இந்த மசோதாவைக் கொண்டுவருகிறீர்கள். வக்ஃப் சொத்துக்கள் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றனவா? இதனால் யார் கஷ்டப்படுகிறார்கள் என்று பாருங்கள்! 'உங்களுக்கு வந்தால் ரத்தம், எங்களுக்கு தக்காளி சட்னியா?' என்று கேட்கிறேன்.*

*ஏர் இந்தியாவை 16,000 கோடிக்கு விற்றீர்கள், ஆனால் அதன் கடன் 63,000 கோடி. உங்கள் நண்பர்களான அதானி, அம்பானி போன்றோருக்கு 4.5 லட்சம் கோடி கடனைத் தள்ளுபடி செய்தீர்கள். அதற்கு மசோதா கொண்டுவரவில்லையே? இப்போது பெண்களுக்காக என்று சொல்கிறீர்கள்.*

*தமிழ்நாட்டில் வக்ஃப் வாரியத் தலைவராக ஒரு பெண் இருந்திருக்கிறார். இப்போதும் இரண்டு பெண்கள் உள்ளனர். ஒருவர் தமிழ்நாடு முஸ்லிம் லீக் முன்னாள் தலைவர் அப்துல் சமதின் மகள், முன்னாள் எம்பி. பெண்கள் ஏற்கெனவே இதில் இருக்கிறார்கள்; நீங்கள் புதிதாக எதையோ செய்வது போல் நடிக்கிறீர்கள்.*

**ஏன் இந்தப் பிரிவினை வாதம்?**

*உண்மையில், உங்களுக்கு உத்தரப் பிரதேசத்தில் வெற்றி வேண்டும். அங்கு வென்றால் மட்டுமே ஆட்சிக்கு வர முடியும். வக்ஃப் நிலங்களைப் பார்த்தால், இந்தியாவில் 8,70,000 சொத்துக்கள், 9,40,000 ஏக்கர்கள், சுமார் 1.2 லட்சம் கோடி மதிப்பு உள்ளது. இதில் 25% உத்தரப் பிரதேசத்தில் உள்ளது. இதை விட்டுவிடுவீர்களா? ஏன் இந்தப் பிரிவினைவாதம்?*

*இந்த அரசு சிறுபான்மையருக்கு எதிராகவே செயல்படுகிறது. வாஜ்பாய் காலத்தில் ஒரு இஸ்லாமிய அமைச்சர் இருந்தார். இப்போது உங்களிடம் ஒரு இஸ்லாமிய கூட இல்லை.*

*நாங்களாவது முஸ்லிம்களுடன் கூட்டணி வைத்து, ராஜ்யசபாவில் முஸ்லிம் எம்பி வைத்திருக்கிறோம். இன்று ஒரு சிறுபான்மை அமைச்சரும் உள்ளார். நீங்கள் நல்லது எதையும் செய்யவில்லை.*

*முதலில் இஸ்லாமியர்களை ஒழித்தார்கள், அடுத்து கிறிஸ்தவர்களை ஒழிப்பார்கள், பின்னர் தலித்களை ஒழிப்பார்கள், பின் யாரும் மிச்சமிருக்க மாட்டார்கள்.*

*நீங்கள் பசுத்தோலைப் போர்த்திய புலியைப் போல் மக்களை ஏமாற்றி, வாக்கு வங்கி அரசியல் செய்கிறீர்கள். இதைச் செய்யாதீர்கள். நன்றி, மிகவும் நன்றி, அவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பை அளித்ததற்கு நன்றி.*

*இவ்வாறு அவர் உரையாற்றினார்.*

### 'வந்தே பாரத்' ரெயில்களில் பணிபுரிவோர்

# ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் பேச வேண்டும்!

## மக்களவையில் - தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தல்!

*புதுடெல்லி, ஏப்.5-*

*நாடாளுமன்ற மக்களவையில், தென்சென்னை தொகுதி எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் வந்தேபாரத் ரெயில்கள் இயக்கம் பற்றி கேள்விகள் கேட்டிருந்தார். இதற்கு ரெயில்வேத்துறை மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். இந்த கேள்வி நட்சத்திர கேள்வி என்பதால் அதன்மீது தமிழச்சி தங்கபாண்டியன் துணைக்கேள்வியும் கேட்டார்.*



*அதாவது, "தமிழ்நாட்டில் 11 வந்தே பாரத் ரெயில்கள் இயக்கப்படுவதாக தெரிவித்துள்ளீர்கள். ரெயில் பெட்டிகள் சென்னை ஐ.சி.எப்.பில் உருவாக்கப்படுவதாக இருந்தாலும், அந்த ரெயில்களில் வட இந்திய உணவுகளே வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டின் பாரம்பரிய உணவுகள் புறக்கணிக்கப்படுகிறது. பயணிகள் விருப்பத்தின் பேரில் உணவுப்பட்டியல் பெற்று இருக்கிறீர்களா? தென் இந்திய உணவுகள் வழங்கப்படுமா? அதுபோல ரெயில் உணவக தொழிலாளர்கள் இந்தியிலேயே பெரும்பாலும் பேசுகிறார்கள். இது பயணிகளுக்கு கடினமாக இருக்கிறது. அவர்கள் கட்டாயம் ஆங்கிலம் மற்றும் தமிழ் பேச வேண்டும். மேலும் மதுரை, திருச்சி போன்ற நகரங்களுக்கு நேரடி வந்தேபாரத் ரெயில்கள் இயக்க வேண்டும்" என கேட்டார்.*

*இதற்கு அஸ்வினி வைஷ்ணவ் பதில் அளிக்கையில், "பல ரெயில்கள் தரப்பட்டு இருப்பதால் தமிழ்நாட்டு மக்கள் மகிழ்ச்சி அடைந்து இருக்கிறார்கள். அனைவருக்குமான வளர்ச்சி என்ற பிரதமரின் அணுகுமுறையால் அனைத்து மாநிலங்களும் பயன்பெறுகின்றன. வந்தே பாரத் ரெயில் சேவை அறிமுகப்படுத்தப்பட்டபோது தரமான சேவை வழங்கப்படும் என பிரதமர் குறிப்பிட்டு இருந்தார். பயணிகளுக்கு உள்ளூர் உணவுகளை வழங்க புதிய அமைப்பு உருவாக்கப்பட்டு இருக்கிறது. கேரளாவில் பயணிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதனை விரிவுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது" என்றார்.*